1974 மார்ச் 6

Periakulam tank

* 303 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government are aware of the non-availability of water at the Periakulam lake in Srivilliputhur area for the past many years;

(b) if so, whether the Government are aware of the letters appearing in the Mail of Madras around 21st October 1974; and

(c) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம்.

(இ) ஆம்.

(உ) திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் "அழகரணை திட்டம்" ஆய்வு முடிவில் உள்ளது. இத் திட்டத்தின் மதிப்பீடு சுமார் 8 கோடி ரூபாய்களாகும். இத்திட்டம் செயலாக்கப்பட்டால் ஏராளமான குளங்கள் பயனடையும். பெரியகுளம் கண்மாயிக்கு இத் திட்டத்தால் உறுதியாக தண்ணீர் கிடைக்கும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இவ்வித நிலைமைகள் மூலம் விவசாயிகளுக்கும் பல கஷ்டங்கள் ஏற்படு கின்றன. விவசாய உற்பத்தியும் பாதிக்கப்படுகின்றது. ஆதலால், இவ்வித நிலைமையை உடனடியாகப் போக்க, துரித நடவடிக்கை எடுக்க அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசுக்கு வந்ததற்குப் பிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

கோவை நகரில் அலுவலகக் கட்டடங்கள்

* 304 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் மாநில அரசின் பல்வேறு இலாகாவிற் காக சொந்த கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவசம் என்ன?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) கோவை நகரில் மாநில அரசின் பல்வேறு துறைகளுக்காக ரூ. 71 இலட்சம் செலவில் ஒரு மைய பல அடுக்கு கட்டிடம் கட்டும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை விரைவாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இரண்டாவதாக கோவை நகரத்திலுள்ள கட்டிடங்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற வாடகை மிக அதிகமாக இருக்கிறது. அதைப் போக்க எல்.ஐ.சி.யிடமோ, வங்கியிலோ கடன் பெற்று கட்டிடங்கள் கட்டினால், 20 ஆண்டுகளில் பணத்தையும் கட்டிவிடலாம், கட்டிடமும் அரசுக்குச் சொந்தமாகும். அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தற்போதுள்ள நெருக்கடியான நிதி நிலையினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நிதிநிலை தாராளமானவுடன் இந்த வேலை தொடங்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே போட்டிருந்த அந்தத் திட்டத்திலே எந்த எந்த அலுவலகங்கள் சேர்க்கப்பட்டிருந்தன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏறக்குறைய வாடகையில் இருக்கிற எல்லா அலுவலகங்களையும் கொண்டு வருவதற்கு 6 அடுக்குக் கட்டிடம் கட்டுவது என்று திட்டம் போடப்பட்டது.

திரு. சு. துரைசாமி: அந்தக் கட்டிடம் எந்த இடத்தில் கட்டப்பட இருக்கிறது? கோவையில் மையமாக இருக்கும் மத்திய சிறைச்சாலைப் பக்கத்தில் இருக்கும் இடத்தில் இதைக் கட்ட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதே இடத்தில் கட்ட திட்டம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.